புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 220 • 14-02-2026 • சனி • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி- புதுச்சேரி


Volum 01 • Issue: 220 • 14-02-2026 • Saturday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy-Puducherry


# “திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்வு” : முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி

சென்னை: செப்.14–

எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி பயனாளர் களுக்கு வழங்கப்படும் என அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், “மிகவும் முக்கியமான விஷயத்துக் காக தான் இந்த வீடியோ. நேற்று காலை அரசு சார்பில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்ட பயனாளிகளுக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவாக வந்திருக்கும்.

எதற்காக இந்த பணம் என்றால், நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது கரோனா நோய் பரவலின் தாக்கம் உச்சத்தில் இருந் தது. அதை சமாளித்து மக்களின் உயிரை காத்தது மட்டுமல்லாது வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகையும் வழங்கினோம். முந்தைய ஆட்சியில் விட்டுச் சென்ற நிதி நெருக்கடியை சமாளித்து ஆட்சிக்கு வந்ததும் பல திட்டங்களை நிறைவேற்றினோம்.

ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு முன்பாக மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்தேன். அப்போது இது சாத்தியமே இல்லை என சிலர் சொல்லி இருந்தார்கள். இருப்பினும் நிதி நெருக்கடியை சமாளித்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை மீறி கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம். முதலில் 1.13 கோடி மகளிருக்கு பயனளித்து வந்த இந்த திட்டமானது அண்மையில் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது 1.31 கோடி மகளிர் பயன் பெற்று வருகின்றனர்.

இது வெறும் நிதியுதவி மட்டுமல்ல. சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலான உரிமைத் தொகை. இதை கொண்டு அன்றாட வீட்டுச் செலவுகள், குடும்பத்தினரின் மருத்துவச் செலவுகள், குழந்தைகளின் கல்விச் செலவுகள் என பல அத்தியாவசிய செலவுகளை மகளிர் தாங்களாவே மேற்கொள்ள இந்த திட்டம் வழிவகுக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு மாதமும் 15ம் தேதியை திட்ட பயனாளர்கள் ஆவலுடன் எதிர்பார்க்



கின்ற நாளாக அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த இந்த திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றன.

இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வருகின்றோம். அதற்கு எதிராக டெல்லியில் உள்ள ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக உள்ள மற்றொரு கூட்டமும் எதிர்வரும் தேர்தலை காரணம் காட்டி அடுத்த மூன்று மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கான சூழ்ச்சி செய்வதாக தகவல். இது சார்ந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாக செய்திகள் வருகிறது.

1.31 கோடி மகளிர் பயனடையும் இந்த திட்டத்தை மூன்று மாதங்கள் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என்பதை உங்கள் வீட்டில் ஒருவராக உள்ள எனக்கு நன்றாகவே தெரியும். கடும் வெயிலில் வேலைக்கு செல்ல கடினமாக இருக்கும் கோடை காலத்தில் இந்த தொகை நிறுத்தப்பட்டால் உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என்பது எனக்கு தெரியும். உங்கள் மாதாந்திர செலவை எப்படி சமாளிக்க முடியும். குடும்பத்தினருக்கு மாத்திரை மருந்து வாங்கித் தர முடியுமா? தேர்வு நேரத்தில் குழந்தைகளுக்கான கல்விச் செலவை சமாளிக்க முடியுமா? இதையெல்லாம் எண்ணி பார்த்துதான் முக்கியமான முடிவை எடுத்துள்ளேன்.

அதன்படி இந்த பிப்ரவரி மாதம் மட்டுமல்லாது அடுத்த இரண்டு மாதங்களான மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகையையும் சேர்த்து ரூ.3 ஆயிரம், கூடுதலாக கோடை கால செலவை கருத்தில் கொண்டு மேலும் ரூ.2 ஆயிரம் சிறப்பு தொகையும் சேர்த்து இந்த பிப்ரவரி மாதம் ரூ.5 ஆயிரத்தை சிறப்பு மகளிர் உரிமைத் தொகையாக 1.31 கோடி மகளிருக்கு வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தருணத்தில் உன்னொரு அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த மூன்று மாதங்களுக்கு நீங்கள் பயன்படுத்த வேண்டி உள்ளது. அதனால் கொஞ்சம் கவனமாக செலவிடுங்கள். முடிந்தவரை சேமிக்கவும் பாருங்கள்.

அன்பு சகோதரிகளே, உங்கள் ஆதரவோடு அடுத்து அமைய உள்ளதும் திராவிட மாடல் ஆட்சிதான். அதனால் உங்கள் மனம் குளிரும் சிறப்பான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உங்களுக்கான உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். சொன்னதை செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி இது.

இதை எப்படி செய்வீர்கள் என சிலர் கேட்கலாம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் வளர்ச்சி பெற செய்துள்ளோம். அதனால் எந்த தடை வந்தாலும் அதை யெல்லாம் தாண்டி ‘தமிழ்நாடே’ வெல்வோம் ஒன்றாக” என்றார் முதல்வர் ஸ்டாலின்.

## ஐபிஎஸ் அதிகாரிகள் 3 பேரை இடமாற்றம் செய்து கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் உத்தரவு!!

சென்னை: பிப்.14–

ஐபிஎஸ் அதிகாரிகள் 3 பேரை இடமாற்றம் செய்து கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் உத்தரவிட்டுள்ளார். சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் மற்றும் மதன் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திருநெல்வேலி மாநகர துணை காவல் கண்காணிப்பாளராக விஜயகுமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.






அதிமுகவில் இணைந்தனர் மாற்று கட்சியினர் வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி சூளகிரி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட திமுக நிர்வாகி காளிங்கவரம் மு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் நாகராஜ் அவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி அதிமுக துணை பொதுச் செயலாளர் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் KP முனுசாமி BABL MLA அவர்களின் முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்து கொண்டனர் உடன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் கழக தொண்டர்கள் உடன் இருந்தனர்,

# சேலம் த.வெ.க.பிரசாரத்தில் சோகம் மயங்கி விழுந்த வாலிபர் உயிரிழப்பு.

சேலம். பிப்.14–

சேலம் சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.)நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஒரு துயரச் சம்பவம் நேர்ந்துள்ளது.

கட்சித் தலைவர் விஜய் மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், கூட்டத்தில் பங்கேற்ற சிராஜ் (37) என்ற இளைஞர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

சேலம் சிவசக்தி நகரைச் சேர்ந்த சிராஜ், வடமாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். கடந்த பல ஆண்டுகளாகத் தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் சேலத்தில் வசித்து வந்த இவர், வெள்ளி கொலுசு தயாரிப்பு மற்றும் கட்டட வேலைகளில் ஈடுபட்டு வந்தார். இவருக்கு ஏற்கனவே ஒரு வருடத்திற்கு முன்பு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

:விஜய்யின் பேச்சைக் கேட்கும் ஆர்வத்தில், திடலின் முன் வரிசையில் நீண்ட நேரமாகச் சிராஜ் நின்று கொண்டிருந்தார். அப்போது திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்த அவரை, அங்கிருந்தவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இருப்பினும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அன்னதானப்பட்டி காவல் துறையினர் தற்போது இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அரசியல் எழுச்சி மிக்க ஒரு கூட்டத்தில், தொண்டர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் நாடு தழுவிய வேலை நிறுத்தம் , மற்றும் சாலை மறியல் போராட்டம்



திருச்சி, பிப். 14–

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் தொழிலாளர் நல சட்டங்கள் 44 ஐ 4 சட்ட தொகுப்பாக மாற்றியதை கைவிடவும், புதிய விதை மசோதா 2025 மின் மசோதாக்களை கைவிட வலியுறுத்தியும், நாடு தழுவிய வேலை நிறுத்தம் மற்றும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளான இந்திய விவசாயிகளையும் விவசாயத்தையும் பாதுகாக்க புதிய விதை மசோதாவை திரும்பப் பெறுவதாகவும், இலவச மின்சாரத்தை பறிக்கும் மின் மசோதா 2025 கைவிடவும், தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை பறிக்கும் புதிய தொழிலாளர்கள் சட்ட தொகுப்பையும் திரும்பப் பெற வலியுறுத்தியும், பொது துறைகளை தனியார் மையமாக்கும் மோசடி கொள்கைகளையும் கைவிட்டு பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாத்திடவும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கிட அமெரிக்கா வரி விதித்திருக்கிறது அடிபணியாதே என ?இந்திய தொழில்களையும் கோடிக்கணக்கான தொழிலாளர்களை பாதுகாத்திடவும், கட்டுமானம் மற்றும் ஆட்டோ சாலை போக்குவரத்து தையல் உள்ளிட்ட முறைசார தொழில் சார்ந்த நல வாரியங்களை சீரழிக் காதேஎன வலியுறுத்தியும், சாலை போக்குவரத்தில் பன்னாட்டு முதலாளிகளை அனுமதிக்காதே என ?புதிய மோட்டார் வாகன சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும், முறைசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பிற்கு தேசிய நிதியை உருவாக்கிடவும், உள்ளாட்சி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் வகையில் ஊராட்சிகளுக்கான நிதியை முழுமையாக வழங்கிடவும், மகாத்மா காந்தி கிராம புற வேலை உறுதிச் சட்டத்தை விக்ஷி பாரத் ஜி ராம்ஜி திட்டம் என்ற பெயரில் சீரழிக்காதே என? பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மோடி தலைமையிலான பாஜக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



உரிமைத் தொகையை உயர்த்தக் கோரி தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தினர் திருச்சி நீதிமன்றம் அருகே சாலை மறியல்150க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

# தமிழகத்தில் ஊழலை ஒழிக்க லோக ஆயுத்தா அமைப்பை செயல்படுத்த வேண்டும்

## ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் தேர்தல் அறிக்கை வெளியிட்டது.

திருச்சி பிப் 14

தமிழ்நாடு. புதுச்சேரி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பு சார்பில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் காண தேர்தல் அறிக்கையை வெளியிட்டு மாநிலத் தலைவர் முகமது ஹனிபா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது.

ஒழுக்கத்தில் , நீதியில், சம சீரான வளர்ச்சியில், சுகாதாரத்தில் சிறந்த தமிழ்நாடு விளங்க புதிதாக பொறுப்பேற்கும் அரசு விளங்க வேண்டும். மேலும் ஊழல், மது போதை இல்லாத அரசாக இருக்க வேண்டும்.

மின் கட்டணத்தை மாதந்தோறும் வசூலிக்கின்ற நடைமுறையை கொண்டு வர வேண்டும் ஏழை எளிய நடுத்தர மக்களின் மீதான கட்டண சுமைகளை குறைக்க வேண்டும் ஊழலை ஒழிப்பதற்காக. கொண்டு வரப்பட்ட லோக் ஆயுத்தா அமைப்பின் செயல்பாடுகளை முடக்கி விட வேண்டும். ஊழல் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக சிங்கப்பூரை போன்ற சுதந்திர மான நிறுவனம் அமைக்க வேண்டும்.தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மத்திய அரசு நீர்த்துப் போக செய்து விட்ட நிலையில் அதற்கு மாற்றாக தமிழ்நாடு அரசு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருச்சியில் இருக்கின்ற ஐ எம் கல்வி நிறுவனம் போன்று கூடுதலாக மற்றொரு நிறுவன தொடங்க வேண்டும். சென்னையிலும் மதுரையிலும் நிறுவப்பட்டு உள்ள நூலகம் போல மாவட்டம் தோறும் சிறந்த நூலகங்களை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது திருச்சி மக்கள் தொடர்பு அலுவலர் நவாஸ்கான்,நிர்வாகிகள் நாசர்,கமால், அப்துல் சலாம் உள்ளிட்ட பலர் உடன் இருந்தார்.

# பேரிடர் மேலாண்மை குழு தன்னார்வலர் பள்ளி நிர்வாகியிடம் வாழ்த்து.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், முட்டத்தூரில் செயல்பட்டு வரும் அரசு நிதியுதவிப் பள்ளியான ஒய்க்காப் மேனிலைப் பள்ளியின் புதிய நிர்வாகி முனைவர். ஜேக்கப் ராஜரத்தினம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். அவ்வமையம் பள்ளியின் பட்டதாரி ஆசிரியரும், ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்டக் கன்வீனர் முனைவர். ம.பாபு செல்வதுரை அவர்கள் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தமிழ்நாடு கிளை சார்பில் நடத்தப்பட்ட, பேரிடர் மேலாண்மை தன்னார்வலருக்காக பயிற்சியில் பங்கேற்று பயிற்சி முடித்தமைக்கான சான்றினை நிர்வாகியிடம் சமர்ப்பித்து வாழ்த்து பெற்றார் , உடன் பள்ளி தலைமையாசிரியர் டேவிட்சுரேஷ்பாபு. உதவி தலைமையாசிரியர்கள் . ப. ஜெய செல்வி, . தே. ஜேக்கப் ஜீவானந்தம் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்து வாழ்த்தினர்.



புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு வரை நிலைக் கழகம் மூலம் மணவெளி சட்டமன்றத் தொகுதி அபிஷேகப்பாக்கம் பகுதியில் ரூ.16.38 லட்சம் திட்ட மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவருமான திரு செல்வம் ஆர் அவர்கள் இன்று 13.02.2026 காலை தொடங்கி வைத்தார். மணவெளி சட்டமன்றத் தொகுதி அபிஷேகப்பாக்கம் பகுதியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை பின்புறம் மற்றும் காமராஜர் தெரு பகுதிகளுக்கு புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு வரை நிலை கழகம் மூலம் ரூ16.38 லட்சம் திட்ட மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்க தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவருமான திரு செல்வம் ஆர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அரசாணை பெற்று தந்தார். அதன்படி இப்பணிகளை துவங்கும் முகமாக இன்று காலை அப்பகுதியில் நடைபெற்ற பூமி பூஜையில் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு வரை நிலை கழக செயற்பொறியாளர் திருமதி விக்டோரியா உதவி பொறியாளர் திரு ஜெயமுகுந்தன் மற்றும் அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தங்க தளபதி அவர்கள் ஆணைக்கிணங்க மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நிதி இல்லை 100நாள் வேலை இல்லை வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ் நாட்டை வஞ்சித்த பாஜகதுணை போகும் அதிமுகவைக் கண்டிது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட அவைத்தலைவர். முகமது சகி அவர்கள் தலைமையில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் பொது குழு உறுப்பினர் முன்னாள் MLA க்கள் நகரம் ஒன்றிய செயலாளர்கள் பகுதி செயலாளர்கள் வட்ட செயலாளர்கள் நகர கழக தோழர்கள் ஒன்றிய தோழர்கள் மற்றும் கழக தோழர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள் எல்லா அணி நிர்வாகிகள் மற்றும் இதில் கலந்து கொண்டனர்

## கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம்

# திருச்சி மாவட்டத்தில் 20 இடங்களில் தொழிற்சங்கத்தினர் மறியல் 3000 பேர் கைது பஸ், ஆட்டோக்கள் வழக்கம்போல் ஓடின

திருச்சி பிப்.14

தொழிலாளர் சட்ட தொகுப்பு அமலாக்கப்படுவதாக 21.11.2025ல் வெளியிட்ட அறிவிப்பினை திரும்ப பெற வேண்டும். ஆட்டோ, கட்டுமானம், சுமைப் பணி, தரைக்கடை, அமைப்புசாரா , ஓட்டுநர்கள், வீட்டு வேலை செய்வோர் உள்ளிட்ட முறைசாரா தொழிலாளர்களுக்கு தேசிய நிதி ஆணையத்தை உருவாக்க வேண்டும். நல வாரியங்களை சீர்படுத்த பணப்பயணங்களை கூடுதலாக உடனுக்குடன் வழங்க வேண்டும். 100 நாள் திட்டத்தில் தேசத்தந்தை மகாத்மா காந்தி யின் பெயரை நீக்கியதோடு அறுவடை காலங்களில் வேலை தரக்கூடாது என்றும் வேலை தருவதை மத்திய அரசின் உரிமையாக்குவதோடு நிதியை வெட்டி சுருக்கி திட்டத்தை சீரழிப்பதை கைவிட வேண்டும். விவசாயி களையும், விவசாயத்தையும் கார்ப்பரேட் கம்பெனிகளிடம் அடகு வைக்கும் விதைச்சட்டம் 2025 திரும்பப் பெற வேண்டும்.

பாரம்பரிய விவசாயத்தை பறித்து மரபு விதைகளை அழிக்கும் கார்ப்பரேட் முதலாளிய ஆதரவு விதை மசோதா 2025ஐ ரத்து செய்ய வேண்டும்.

அணுசக்தி மின்சாரத் துறையில் தனியார் முதலாளிகளை அனுமதிக்கும் 2025 சாந்தி மசோதாவை ரத்து செய்ய வேண்டும். ரயில்வே, எல்ஐசி போன்ற பொதுத் துறைகளில் தனியார்மயத்தை புகுத்தி அரசு பணிகளை காண்ட்ராக்ட் மயமாக்குவதை கைவிட வேண்டும். மோட்டார் வாகன சட்டத்திருத்தங்களை திரும்பப்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு, ஏஐடியுசி சார்பில் ஸ்ரீரங்கத்தில் ரயில்மறியல் போராட்டம் நடைபெற்றது .போராட்டத்திற்கு சிஐடியு தரைக்கடை சங்க மாவட்ட செயலாளர் செல்வி தலைமை வகித்தார். மறியலில் ஈடுபட்ட. சிஐடியு நிர்வாகிகள் ஜெமினி, கோவிந்தன், சுப்பிரமணி, ரகுபதி, ஏஐடியுசி நிர்வாகிகள் ராமராஜ், சொக்கி சண்முகம், அன்சர் தீன், பார்வதி உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக ராஜகோபுரத்தில் இருந்து ஊர்வலமாக வந்து கடலூர் பயணிகள் ரயிலை மறித்தனர். அப்போது மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர் .இதே போல் திருச்சி மாவட்டத்தில் புறநகர் பகுதியில் சோமரசம்பேட்டை, திருவெறும்பூர், மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி, தொட்டியம், முசிறி, துறையூர், தாப்பேட்டை உப்பிலியபுரம், மண்ணச்சநல்லூர் மேற்கு, கிழக்கு, லால்குடி புள்ளம்பாடி ஆகிய 18 இடங்களில் தொழிற்சங்கங்கள் சார்பில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றது.இந்த மறியல் போராட்டத்தில் ஏராளமானோர் கைது செய்யப் பட்டனர்.இதேபோன்று திருச்சி மத்திய பஸ் நிலையம் பெரியார் சிலை முன்பு அனைத்து தொழிற்சங்கத்தினர் ஒன்றாக கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.பின்னர் பெரியார் சிலையில் இருந்து தொழிற்சங்கத்தினர் ஊர்வலமாக ரயில் நிலையம் நோக்கி சென்றனர்.அங்கு ரயில் நிலையம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பியவாறு இச்சங்கத்தினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சி ஜங்ஷனில் நடந்த மறியல் போராட்டத்திற்கு அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் தொ.மு.ச. ஜோசப் நெல்சன்,குணசேகரன்,எத்திராஜ்,சி.ஐ.டி.யு ரெங்கராஜன்,ஏ. ஐ. டி . யூ.சி சுரேஷ்,

ஐ.என்.டி யு.சி. வெங்கட் நாராயணன், எஸ்.ஆர் ஆறுமுகம், எல்.எல்.எப். தெய்வீகன், ஏ.ஐ.சி.சி.டி.யு.சி ஞானதேசிகன், யு.டி.எஸ். சிவசெல்வம், எச்.எம்.எஸ். ஜான்சன், விவசாய தொழிலாளர் சங்கம் அயிலை சிவ சூரியன் ஆகிய தொழிற்சங்க நிர்வாகிகள் தலைமை தாங்கினர்.

இப்போது கோஷங்களை எழுப்பி மறியலில் ஈடுபட்டனர். சிலர் ரயில் நிலையம் நோக்கி உள்ளே செல்ல முயன்றனர். அப்போது போலீசார் தடுத்து நிறுத்தி போராட்டக்காரர்களை கைது செய்தனர்.சிலர் ரயில் நிலையம் உள்ளே தண்டவாளத்தில் அமர்ந்து ரயிலை மறித்துபோராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி மாவட்டத்தில்

மொத்தம் திருச்சி மாநகர், திருவரங்கம் உள்பட 20 இடங்களில் இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் முழுவதும் நடந்த இந்த மறியல் போராட்டத்தில் சுமார் 3000 பேர் கைது செய்யப்பட்டனர். இது நடந்த வேலை நிறுத்த போராட்டத்தில் 9 தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டன. வங்கி பணிகள்,பெல் நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு நிறுவன பணிகள் பாதிக்கப்பட்டன. ஆனால் பஸ்கள், ஆட்டோக்கள் வழக்கம்போல் ஓடின.சில இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கத்தினர் ஆட்டோக்களை இயக்கவில்லை .

வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

இதேபோல் வங்கி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் வழக்கமான நேரடி பண பரிவர்த்தனை உள்ளிட்ட வங்கிப் பணிகள் பாதிக்கப் பட்டன.திருச்சி பெண் நிறுவன ஊழியர்கள் மற்றும்

பொதுத்துறை காப்பீட்டு நிறுவன ஊழியர்களும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# மோதிலால் நேரு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ‘விக்சித் பாரத் யுவா கனெக்ட்’ விழிப்புணர்வு நிகழ்ச்சி!




புதுச்சேரி: பிப்.14–

புதுச்சேரி மோதிலால் நேரு அரசு தொழில் நுட்பக் கல்லூரி (Motilal Nehru Govt. Polytechnic College) வளாகத்தில், கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) சார்பில் ‘விக்சித் பாரத் யுவா கனெக்ட்’ என்ற சிறப்பு விழிப் புணர்வு நிகழ்ச்சி மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம் பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி வெற்றிகரமாக நடத்தப் பட்டது.

இநிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர். நாககாந்திகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மின்யியல் மற்றும் மின்னணுவியல் துறைத் தலைவர் ஜஸ்டின் இசையாஸ் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

புதுச்சேரியின் ‘யூத் ஐகான்’ (Youth Icon) செல்வி. அட்சயஷி. S அவர்கள் சிறப்பு விருந் தினராகப் பங்கேற்று, மாணவர்களிடையே விழிப்புணர்வு உரை யாற்றினார்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளை யும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முருகன் மற்றும் ‘மை பாரத்’ (My Bharat) ஒருங்கிணைப்பு அலுவலர் . திவ்ஹரா வாஹின் ஆகியோர் செய்திருந்தனர்.

இவ்விழாவில் கல்லூரியின் பேரா சிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பணி நிரந்தரம் கோரி புதுச்சேரியில் ஒப்பந்த ஆசிரியர்கள் இரண்டு நாள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம்!



புதுச்சேரி மே. 14–

புதுச்சேரி அரசு பள்ளி கல்வித்துறையில் பணியாற்றி வரும் 292 ஒப்பந்த ஆசிரியர்கள் மற்றும் பாலசேவிக்கா ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி, புதுச்சேரி அரசு ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 21012026 முதல் கல்வித்துறை வளாகத்தில் எட்டாவது கட்டமாகத் தொடர்ந்து காத்திருப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது. முன்னதாக சட்டமன்ற முற்றுகை, சிறை நிரப்பும் போராட்டம், மௌன ஊர்வலம் மற்றும் பாரதப் பிரதமருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் எனப் பல்வேறு நிலைகளில் தங்கள் கோரிக்கைகளை ஆசிரியர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, புதுச்சேரி அண்ணா சிலை (பழைய பேருந்து நிலையம்) அருகில் இரண்டு நாள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் இன்று தொடங்கியது.

புதுச்சேரி அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு கௌரவத் தலைவர் ஜி.ஸி. சேஷாசலம்.

13.02.2026 காலை 9 மணி முதல் 14.02.2026 மாலை 6 மணி வரை.

இதில் 200க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஆசிரியர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை வாழ்த்திப் பல்வேறு ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் பேசினர்:

N. பாலக்குமார் (தலைவர், புதுவை அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு)

A. சிரில் நிக்கோலஸ் (தலைமை ஆசிரியர் சங்கம்)

N. பொற்செழியன் (தலைவர், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கம்)

A. அருள்சாமி (தலைவர், புதுச்சேரி அரசு விரிவுரையாளர் சங்கம்)

ராமதாஸ் (தலைவர், புதுச்சேரி பட்டதாரி ஆசிரியர் சங்கம்)

M. மோகன்தாஸ் (தலைவர், புதுச்சேரி அரசு தொடக்கப் பள்ளி நலச் சங்கம்)

M. ஜனார்த்தனன் (பொதுச்செயலாளர்)

தங்கள் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த அரசு உடனடியாகப் பணி நிரந்தர அரசாணையை வெளியிட வேண்டும் எனப் போராட்டக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுச்சேரி: 26 ஆண்டுகாலப் பணிப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர NHM ஊழியர்கள் கோரிக்கை!



புதுச்சேரி:

புதுச்சேரி சுகாதாரத்துறையில் தேசிய நல்வாழ்வு குழுமத்தின் (NHM) கீழ் பணிபுரியும் ஊழியர்கள், தங்களின் நீண்டகாலப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக் கோரி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். 26 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் தங்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது. ஊழியர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள கடந்த 26 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்தும் இன்னும் நிரந்தரப் பணி ஆணை வழங்கப்படவில்லை. “பணி நிரந்தரமே தீர்வு” என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இரவு நேரப் பணிக் கட்டணம் (Night Duty Allowa nce) மற்றும் நோயாளி பராமரிப்புப் படி (Patient Care Allowance) போன்றவை இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

ஒப்பந்த ஊழியர்களாகச் செயல்படுவதால், முறையான பணிப் பாதுகாப்பு இல்லை என ஊழியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

பணியின் ஒரு பகுதியாக வெளியே செல்லும் போது வழங்கப்படும் TA/DA படிகள் மற்றும் இதர ஊதிய உயர்வுகள் குறித்த அறிவிப்புகள் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை எனச் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது.

“நாங்கள் வாழ்விலே ஒளியேற்ற எங்களது 26 ஆண்டுகாலக் கொடுமை நிலையை முடிவுக்கு வர வேண்டும்“ என்ற முழக்கத்துடன், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 11.02.2026 முதல் தொடர் மறியல் போராட்டம் தொடங் கப்பட் டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சுகாதாரத்துறையின் முதுகெலும்பாகத் திகழும் தங்களை, அரசு மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் நடத்தக் கூடாது என்றும், பொது மக்களின் ஆதரவுடன் தங்கள் உரிமைகளுக்காகப் போராடப் போவதாக வும் ழிபிவி ஊழியர்கள் புதுச்சேரி அரசு சுகா தாரத்துறை (CITU & PSHSEU) அமைப் பினர் தெரிவித் துள்ளனர்.

## மண்ணின் மைந்தர்களுக்குப் புறக்கணிப்பா?

# புதுச்சேரியில் ஆவணங்கள் இருந்தும் பட்டா கிடைக்காததால் ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் முதியவர் தர்ணா!



புதுச்சேரி: பிப். 14–

புதுச்சேரி அபிஷேகப் பாக்கம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் என்பவர், தமக்கு வழங்கப்பட வேண்டிய மனைப் பட்டாவை வலியுறுத்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தில் தனிமனிதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அபிஷேகப்பாக்கம் பகுதியில் நீண்டகாலமாக வசித்து வரும் சந்திரனுக்கு, பட்டா பெறுவதற்கான அனைத்து அரசாங்க ஆவணங்களும் சரியாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், சம்பந்தப்பட்ட துறையினர் அவருக்கு மனைப் பட்டா வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட் டுள்ள சந்திரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தனது வேதனையை பதிவு செய்தார், “புதுச்சேரியின் பூர்வகுடி மக்களாகிய எங்களுக்கு முறையான ஆவணங்கள் இருந்தும் பட்டா வழங்க இந்த அரசு மறுக்கிறது. ஆனால், அண்டை மாநிலமான தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இங்கே எளிதாகப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.”

“மண்ணின் மைந்தர்களான எங்கள் மீது இந்த அரசாங்கம் ஏன் கருணை காட்டவில்லை? தகுதியுள்ளவர்களுக்கு உரிமை மறுக்கப்படுவது ஏன்?”

“முறைப்படி போராடியும் நீதி கிடைக்காத நிலையில், இந்த அரசாங்கம் வழங்கிய ரேஷன் கார்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட அனைத்து அரசு ஆவணங்களையும் அரசாங்கத் திடமே திரும்ப ஒப்படைக்கத் தயாராகி விட்டேன்.”

அரசாங்கம் தனக்கு வழங்கிய உரிமைகளால் எந்தப் பயனும் இல்லை என்ற விரக்தியில், அவர் தற்போது ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலக வளாகத்திலேயே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

சொந்த மண்ணிலேயே பட்டா கேட்டு ஒரு முதியவர் தனது அரசு அடையாள அட்டைகளைத் துறக்கத் துணிந்த இந்தச் சம்பவம், புதுச்சேரி அரசு நிர்வாகத்தின் மீதான அதிருப்தியை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



புதுச்சேரி மாநிலம் புதுச்சேரி நகராட்சி நைனார்மண்டபம் அரசு ஆரம்பப்பள்ளியில் கழிப்பறை கட்டிடம் புனரமைத்தல் மற்றும் பழுதடைந்த சுற்றுச்சுவரை புதிதாக கட்டுதல் ஆகிய பணிக்காக ரூபாய் 13.97 லட்சம் (ரூபாய் பதிமூன்று லட்சத்து தொன்னூற்று ஏழாயிரம்) மதிப்பீடு செய்யப்பட்டு அரசாணை பெறப்பட்டது. இந்த வேலையைத் துவங்கும் முகமாக 13.02.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் முதலியார்பேட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் லி. சம்பத், அவர்கள் முன்னிலையில் இப்பணிக்கான பூமி பூஜை நடைபெற்றது. கோட்டம்மிமி இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி பொதுப்பணித்துறை சிறப்பு கட்டிடம் செயற்பொறியாளர் பக்தவச்சலம் அவர்கள், உதவிப்பொறியாளர் எழில்வண்ணன் அவர்கள், கல்வித்துறை பள்ளித் துணை ஆய்வாளர் வட்டம் II செல்வி அவர்கள், இளநிலைப்பொறியாளர் செல்வி.ஆர்த்தி , பள்ளி தலைமையாசிரியர் உமாபரமேஸ்வரி , மற்றும் ஆசிரியர்கள், கட்டிட ஒப்பந்ததாரர் பரிணாமன் அவர்கள், ஊர் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பல்லடத்தில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி ஆர்ப்பாட்டம்!!!



பல்லடம்:பிப்14

பல்லடத்தில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பில் அரசு ஊழியர்களுக்கு பழைய ஒய்வூதிய திட்டத்தை அமல்ப்படுத்த வேண்டும்.

செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். மாதம் தோறும் மின் கட்டணம் கணக்கீடு செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு டியூசிசி அக்கட்சி மாநில துணைத் தலைவர் தேளி கே.காளிமுத்து தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் தாமோதரன், மாவட்ட துணைத் தலைவர்கள் தனசேகர்,வெள்ளத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தொழிற்சங்க மாநில பொதுச்செயலாளர் திருப்பதி, மாநில தலைவர் நல்லமுத்து, மாவட்ட தலைவர் திருநாவுக்கரசு, மாவட்ட செயலாளர் ரமேஷ், சுப்பையா .

ஐ.டி.அணி கோகுல் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞரணி தலைவர் சக்திவேல் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்...

# உழவர்கரை நகராட்சியில் ரூ.71.65 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு பூமி பூஜை!



புதுச்சேரி: பிப்.14–

புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ.71.65 லட்சம் மதிப் பீட்டில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான பூமி பூஜை நடைபெற்றது.

இந்த நிதிய ஒதுக் கீட்டின் கீழ் பின்வரும் மூன்று முக்கிய பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன, முத்திரையர் பாளையம் ஆயிகுளத்தின் கரையில் கருமாதி கொட்டகை கட்டுதல் மற்றும் சாலை அமைத்தல் ரூ.28.55 லட்சம். காந்திதிருநல்லூர் காந்தி வீதியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் ரூ.20.57 லட்சம். காந்திதிருநல்லூர் காந்தி வீதியில் இரண்டு நியாய விலைக் கடைகள் கட்டுதல் ரூ.22.53 லட்சம்.

இந்தத் திட்டப் பணிகளை அரசு கொறடா மற்றும் இந்திரா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் . ஆறுமுகம் @AKD பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ், செயற்பொறியாளர் மலைவாசன், உதவி பொறியாளர் கலிவரதன், இளநிலை பொறியாளர் முத்தையன் மற்றும் ஊர் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வந்தவாசி அருகே கட்டடம் இடிந்து விழுந்து 2 பள்ளி மாணவர்கள் உயிரிழப்பு!

திருவண்ணாமலை: வந்தவாசி அடுத்த இளங்காடு கிராமத்தை சேர்ந்தவர் முனியன். இவர் அரசு தொகுப்பு வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். வீட்டை இடித்து சீரமைப்பதற்கான பணி இன்று காலை நடைபெற்றது. அப்போது முனியனின் உறவினர் மகன்கள் அபினேஷ் மற்றும் முகேஷ் ஆகியோர் வீட்டின் அருகே இருந்துள்ளனர்.

அப்போது வீடு சீரமைப்பு பணியின்போது எதிர்பாராதவிதமாக இடிபாடுகளில் சிக்கி இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 10 வயது சிறுவன் ஒருவன் பலத்த காயங்களுடன் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பாக தகவலறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல்துறையினர் இறந்த சிறுவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவனை மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் பணி நடைபெற்று வருகிறது. இடிபாடுகளில் சிக்கி 2 சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாஜக சார்பில் ஐவர் குழு ஆலோசனை கூட்டம்




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நமது மாவட்ட தலைவர் V.S.கவியரசு.MBA., அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி சட்டமன்ற மண்டல் தலைவர்கள் மற்றும் மண்டல் ஐவர் குழு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தொழிற் பிரிவு மாநில அமைப்பாளர் மற்றும் சட்டமன்ற பொறுப்பாளர் .நி.பாலகிருஷ்ணன் ஜி அவர்கள் கலந்துகொண்டு சட்டமன்றத்தில் அடுத்தகட்ட பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட பொது செயலாளர்கள் .M.R.ராஜேந்திரன், .ஸி.ரி.சுமதி, மாவட்ட பொருளாளர் .ஸி.ராணா, மாநில பொதுக்குழு மற்றும் மாவட்ட சக்திகேந்திர பொறுப்பாளர் வேணு.செல்வம், மாவட்ட நிர்வாகிகள், மண்டல் தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



தமிழக முதல்வர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் பகுதியில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் ரூ.4.81 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய தீயணைப்பு நிலைய கட்டிடத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து ஸ்ரீ ரங்கத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், வருவாய் அலுவலர் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து புதிய கட்டடத்தை பார்வையிட்டனர். இந்நிகழ்வில் ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் சீனிவாசன், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் மத்திய மண்டல இயக்குனர் முரளி, மாவட்ட அலுவலர் வினோத், உதவி மாவட்ட அலுவலர்கள் லியோஜோசப் , சத்யவரதன், நிலைய அலுவலர் சகாயராஜ், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழக நிர்வாக செயற்பொறியாளர் திருமலைசாமி, தீயணைப்பு பணியாளர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி கண்டோன்மேண்ட் பகுதியில் ரூ.26.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரித்துறை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்ட் பகுதியில் நடைபெற்ற விழா நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, வணிகவரித்துறை இணை ஆணையர்கள் ஜெயராமன் (நிர்வாகம்), காஞ்சனா, ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து புதிய கட்டடத்தை பார்வையிட்டனர். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அன்பரசி, திருச்சிராப்பள்ளி வணிகவரித்துறை துணை ஆணையர் மணியன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவிற்கும் துணை போகும் அதிமுகவை கண்டித்து செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்

செஞ்சி, பிப். 14–

நிதி இல்லை 100 நாள் வேலை இல்லை மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவிற்கும் துணை போகும் அதிமுகவை கண்டித்து செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





நிதி இல்லை 100 நாள் வேலை இல்லை ஒன்றிய பட்ஜெட்டில்தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவிற்கும் 100 நாள் வேலையே இனி இல்லாமல் செய்வது ,கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்க துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் நாசக்கார சதி செயலையும், அதற்கு ஒத்து ஊதும் தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்யும் அதிமுகவையும் கண்டித்தும்,மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒன்றிய திமுக சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமை தாங்கி கண்டன உரை நிகழ்த்தினார். கூட்டத்தில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர். வழக்கறிஞர் ரங்க பூபதி,மதிமுக துணை பொது செயலாளர்.ஏகே. மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் சிவா,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், தமிழக வாழ்வுரிமை கட்சியின் பொறுப்பாளர் இராசநாயகம், சூரியமூர்த்தி, வழக்கறிஞர் மழைமேனி பாண்டியன், உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,, உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# வில்லியனூர் திருக்காமீஸ்வரர் ஆலய நான்கு மாட வீதிகளில் ரூ. 5.35 கோடி செலவில் வாய்க்கால் அமைக்கும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !



புதுச்சேரி, பிப். 14–

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, வில்லியனூர் அருள்மிகு கோகிலாம்பிகை உடனுறை திருக்காமீஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி உள்ள நான்கு மாட வீதிகளில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டும் என்ற பொது மக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையை ஏற்று, பொதுப்பணித் துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் வடக்கு பிரிவு மூலம் ரூ. 5.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 'யு' வடிவ கழிவுநீர் வாய்க்கால் கட்டுமான பணிக்கு இன்று காலை ஏழை மாரியம்மன் கோவில் அருகில் பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, வாய்க்கால் அமைக்கும் பணியை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இதில், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் வீரசெல்வம், பொதுப்பணித் துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் வடக்கு பிரிவு செயற்பொறியாளர் வைத்தியநாதன், உதவிப் பொறியாளர் ஜலில், இளநிலைப் பொறியாளர் தேவர், ஊர் முக்கியஸ்தர்கள் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் மண்ணாங்கட்டி, சுப்புராயலு, என்.ஆர். காங்கிரஸ் மகாலிங்கம், சரவணன், சத்தியமூர்த்தி, பாஸ்கர், சண்முகம், சந்துரு, பாரதி, வெங்கடேசன், விஸ்வநாதன், குபேந்தர், ராமலிங்கம், ராஜ்குமார், முத்து, விஜயன், புஷ்பராஜ், சுந்தர், ராஜா, மோகன், தமிழரசு, ரவி, கிருஷ்ணன், கார்த்தியேகன், பழநியாண்டி, ராஜேந்திரன், விஜி, ரவி, சிலம்பு, மணி, பழநி, ராஜ், சுரேஷ், விந்தியன், தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன், அவைத்தலைவர் ஜலால் ஹனீப், இல்க்கயி அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதிதிராவிட அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை அணி அமைப்பாளர் முகம்மது ஹாலித், தொமுச தலைவர் அங்காளன், துணை அமைப்பாளர்கள் சரவணன், கோபி, ராமதாஸ், காளி, காசிநாதன், தொகுதி துணைச் செயலாளர் ஜெகன்மோகன், அரிகிருஷ்ணன், பொருளாளர் கந்தசாமி, செயற்குழு உறுப்பினர்கள் சுப்ரமணியன், சேகர், ஏழுமலை, எம்.எஸ். முரளி, கிளைக் கழக நிர்வாகிகள் சபரிநாதன், ராஜ், ஜனா, மிலிட்டரி முருகன், சரவணன், தங்கராசு, தட்சிணாமூர்த்தி, திலகர், பாண்டியன், பரதன், அன்புநிதி, ராமகிருஷ்ணன், சசிகுமார், ஜெயபால், தயாளன், ஆசிரியர் அமலோர், ராஜாமுகம்மது, மோகன், ரகு, அருள்மணி, கலைமணி, சந்துரு, மணி, நடராஜன், திருநாவுக்கரசு, கோவிந்தராஜ், ராமஜெயம், கோதண்டம்,, முத்து, திருமலை, சுந்தர், மதியழகன், ஸ்ரீகாந்த், அரவிந்த், ஸ்ரீதர், ராம், அன்பு, காளிதாஸ், அசார், வேலுமணி, அபிமன்னன், கனகராஜ், சாருகாசி மற்றும் சிவகணபதி நகர வாசிகள் மற்றும் எஸ்எம்விபுரம் முருகன் கோவில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# NDA கூட்டணி சார்பில் தி.மு.க அரசை கண்டித்து பிஜேபி சார்பில் ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டணம் என்டிஏ கூட்டணி சார்பாக நடைபெற்ற மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் வீடியா திமுக அரசை கண்டித்து பிஜேபி மேற்கு மண்டல் சார்பாக அனைத்து பொதுச்செயலாளர் மண்டல துணைத் தலைவர் மாவட்ட அணி பிரிவு தலைவர்கள் சக்திகேந்திர பொறுப்பாளர்கள் கிளை தலைவர் பிரமாண்டமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பிஜேபியின் பங்களிப்பை மிகச் சிறப்பாக அளித்த பொழுது மண்டல் தலைவர் சி.குமார் மற்றும் மண்டல் பொதுச் செயலாளர் பி சுரேஷ் மண்டல் பொதுச்செயலாளர் திருமால் மண்டல் மாவட்ட பொருளாளர் ராணா ஜி தலைமையில் கலந்து கொண்டனர்.

# தமிழக நீதிக் கட்சியில் இணைந்த குடும்பத்தலைவிகளின், பிறக்கும் முதல் குழந்தைகளுக்கு "தங்க தாரகை திட்டம்" மூலம் தாய் வீட்டு சீதனமாக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்

## கட்சியின் நிறுவனர் வாழவந்தி சரவணன் அறிவிப்பு

ஈரோடு, பிப். 14–

தமிழக நீதிக் கட்சியின் முதல் அரசியல் எழுச்சி மாநாடு ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் டோல்கேட் அருகே நடைபெற்றது. அப்போது மாநாட்டில் தலைமை தாங்கி பேசிய தமிழக நீதிக்கட்சியின் நிறுவனர் வாழவந்தி சரவணன் பேசுகையில்,

தமிழக நீதி கட்சியில் இணைபவர்களுக்கு இலவச மருத்துவக்காப்பீடு திட்டம் நடைமுறைபடுத்தப்படும் என்ற அவர்,

கட்சியில் இணைந்த குடும்பத்தலைவிகளின்,பிறக்கும் முதல் குழந்தைகளுக்கு "தங்க தாரகை திட்டம்" மூலம் தாய் வீட்டு சீதனமாக ரூ15 ஆயிரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். தொடர்ந்து, பேசிய அவர்,





தமிழக நீதி கட்சி ஆட்சிக்கு வந்தால் வீடு இல்லாதவர்களுக்கு 3 சென்ட் நிலம் வழங்கப்படும் என்றும்,

நிலமற்றவர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருவதாகவும் விமர்சித்தார்.

தமிழக நீதிக்கட்சி அமைக்கும் கூட்டணிக்கு ஆதரவு தருமாறு தொண்டர்களை கேட்டுக் கொண்ட அவர், பலமான தமிழகம் படைக்க வேண்டும் என்றால் கல்வி,மருத்துவம், போக்குவரத்து, மற்றும் நிலம் அனைவருக்கும் உரிமையாக வேண்டும் என்றார்.

குரலற்ற மக்களுக்கான குரலாக தமிழக நிதி கட்சி குரல் கொடுக்கும் என கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டில்,

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக நீதி கட்சிக்கு அரசியல் அங்கீகாரம் அளிக்கும் கட்சியுடன் கூட்டணி அமைத்து சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது.

தமிழகத்தின் வர்த்தக தலைநகரமாக கோயமுத்தூர் அறிவிக்க வேண்டும். கோபி செட்டிபாளையம், பொள்ளாச்சி, பழநி ஆகியவற்றை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

கொங்கு மண்டல ஜீவ நதிகளாம் காவேரி, பவானி, நொய்யல் நதிகளை மாசு படாமல் காப்பாற்ற பட வேண்டும். தமிழகத்தில் ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்திட வேண்டும்.

அனைவருக்கும் அரசியல் சமநீதி கிடைத்திட அரசியலிலும் 69% இட ஒதுக்கீட்டை அமுல்படுத்த வேண்டும்

தமிழகத்தின் தொன்மையான கலைகளில் ஒன்றான வள்ளிகும்மி பெருஞ்சலங்கை கலையை வளர்க்க தமிழ அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற்ற மாநாட்டில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் சூரியமூர்த்தி, முன்னாள் அமைச்சர் கருப்பணன், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், திமுக புறநகர் மாவட்ட செயலாளர் தோப்பு வெங்கடாச்சலம், உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். மாநாட்டில் தமிழக நீதி கட்சியின் மாநில தலைவர் ஜெகன், மாநில பொதுசெயலாளர் பாஸ்கரன், மாநில செய்தி தொடர்பாளர் முத்துக்குமார், மாநில பொருளாளர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் B.D.O. ஆபீஸ் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது திமுக அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் இதில் அ இ ஆண்ணா தி.மு.க் சார்பில் நடைபெற்ற ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் கிராம மக்களின் 100 நாள் வேலையை 125 நாளாக அமைத்து தருவேன் என்று வாக்குறுதி கூறினார் அஇஅதிமுக பொது செயலாளர் கே பழனிச்சாமி வாக்குறுதியை கூறினார் அவருடைய சொல்லுக்கு இணங்கி தலைமையில் சிவி சண்முகம் விழுப்புரம் மாவட்டம் கழக செயலாளர் கழக அமைப்பாளர் கழக நிர்வாகிகள் புண்ணியமூர்த்தி பட்டி பாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் பாமக நிர்வாகிகளும் அனைத்து தொண்டர்களும் கலந்து கொண்டனர் பாஜக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421